**செய்தி வெளியீடு எண்:260** **நாள்:11.06.2021**

# <u>செய்திவெளியீடு</u>

## மாண்புமிகு ஊரகத் தொழிற்துறைஅமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் சென்னை–மைலாப்பூர் தொகுதிக்குட்பட்ட நான்கு திட்டப்பகுதிகளில் ரூபாய் 426.19 கோடி மதிப்பீட்டில் 3260 குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்தார்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் சென்னை–மைலாப்பூர் தொகுதிக்குட்பட்ட சீனிவாசபுரம், பட்டினப்பாக்கம், டொம்மிங்குப்பம், ஏகாம்பரம்பிள்ளை மற்றும் முனுசாமிபிள்ளை திட்டப்பகுதிகளில் நடைபெற்றுவரும் கட்டுமானப்பணிகளை இன்று **(11.06.2021)** மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் **30** ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட பருவகால மாறுபாட்டினால், சிதிலமடைந்த கட்டிடங்களை இடித்து, அதே இடங்களில் மறுகட்டுமானம் செய்து, முன்னர் அக்குடியிருப்பில் குடியிருந்தவர்களுக்கே மீண்டும் வீடுகள் ஒதுக்கப்பட்டுவருகிறது. மறுகட்டுமானம் என அழைக்கப்படும் இத்திட்டத்தின் கீழ் ஏகாம்பரம்பிள்ளை மற்றும் முனுசாமிபிள்ளை திட்டப்பகுதியில் ரூ.**31.26** கோடி மதிப்பீட்டில் **208** வீடுகள் கட்டப்படவுள்ளது. இப்பணிகளை ஆய்வு செய்த மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் புதியகுடியிருப்புகள் கட்டும் பணிகளை உடனடியாகத் துவங்க உத்திரவிட்டார். இப்பகுதியில் அருகாமையில் உள்ள பக்கிங்காம் கால்வாய் ஆக்கிரமிப்புதாரர்களையும் கணக்கெடுப்புசெய்து அருகில் உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான நிலத்தில் குடியிருப்புகள் கட்ட உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க அறிவுறுத்தினார்.

பட்டினப்பாக்கம் திட்டப்பகுதியில் ரூ.**152** கோடிமதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் **1188** குடியிருப்புகளை மாண்புமிகு அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் பார்வையிட்டு, மேம்பட்ட தரத்தினை உறுதி செய்யவும், கொரோனா பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட சிரமமான சூழ்நிலையிலும் கட்டுமானபணிகளை கால தாமதம் இல்லாமல், நிர்ணயித்த காலவரம்பிற்குள் பணிகளை முடித்து பயனாளிகளுக்கு வீடுகளை ஒதுக்கவேண்டும் என வாரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். மேலும், இத்திட்டத்தின் கீழ் சீனிவாசபுரம் பகுதி–**1** திட்டப்பகுதியில் ரூ.**51.48** கோடிமதிப்பில் கட்டப்பட்டு வரும் **396** குடியிருப்புகளையும் ஆய்வு செய்து பணிகளை துரிதமாக செயல்படுத்த உத்தரவிட்டார்.

டொம்மிங்குப்பம் திட்டப்பகுதியில் மறுகட்டுமானத் திட்டத்தின் கீழ் ரூ.191.45 கோடி மதிப்பீட்டில் 1472 குடியிருப்புகள் கட்டதிட்டமிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து, டொம்மிங்குப்பம் திட்டப்பகுதியில் தற்போதுள்ள சிதலமடைந்த குடியிருப்புகளை பார்வையிட்ட மாண்புமிகு அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் அக்குடியிருப்புகளில் வசிக்கும் ஒதுக்கீடுதாரர்களுக்கு, புதிதாக கட்டப்பட்டுவரும் பட்டினப்பாக்கம் அடுக்குமாடி குடியிருப்புகளில் ஒதுக்கீடு வழங்குவது உள்ளிட்ட மற்ற கோரிக்கைகளையும் பரிசீலனை செய்து, புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கான உரிய தீர்வை விரைவில் முடிவுசெய்து, அதனை செயல்படுத்துமாறு அறிவுறுத்தினார்கள்.

சீனிவாசபுரம் பழைய குடியிருப்புகளை ஆய்வு செய்து, அதே இடங்களில் அமையவுள்ள புதிய குடியிருப்புகள் 5 மாடிகளுக்கு மிகாமல் இருக்குமாறு திட்டமிட அறிவுறுத்தினார்கள்.

இந்த ஆய்வின் போது தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன், மைலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வேலு, குடிசைப்பகுதி மாற்று வாரிய தலைமைப் பொறியாளர் திரு. இராம.சேதுபதி மற்றும் வாரியபொறியாளர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**